தேன்கனிக்கோட்டை பேரூராட்சி அலுவலகம்
கிருஷ்ணகிரி மாவட்டம்

ந.க.எண் : 117/2010/அ2 நாள் :17.05.2010

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் கீழ்காணும் வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் தேன்கனிக்கோட்டை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **23.06.2010ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து உறையின்மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **23.06.2010ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு** பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **22.06.2010ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை** அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச்சட்டம் 1998 மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும். ஏனைய விபரங்களை இவ்வலுலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

## இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு திட்டம் 2009 – 2010

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஷெட்யூல் படிவ விலை ரூ. | செலுத்தப்பட வேண்டிய டேவணித் தொகை ரூ. | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம். | ஒப்பந்த தாரரின் தகுதி (புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | சர்வே எண்.165/1-ல் அமைந்துள்ள பேருந்து நிலையத்தின் தரைதளம் முழுவதும் சிமெண்ட் தளம் அமைத்தல். | 50,00,000/- | 9,360/- | 1,00,000/- | 6 **மாதங்கள்** | முதல் வகுப்பு |

(த.பி.பா)

# ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர்கள் பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்கவேண்டும்.
2. இந்த வேலைக்கு நிர்ணயிக்கப்பட்ட வைப்புத்தொகை செலுத்திய இரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித்தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித்தொகை ரொக்கமாகவோ அல்லது டிமாண்ட் டிராப்ட் மூலமாகவோ செலுத்தலாம். அரசால் வெளியிட்ட தேசிய சேமிப்பு பத்திரம் அல்லது அரசு கடன் பத்திரம் ஆகியவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் தேன்கனிக்கோட்டை பேரூராட்சி என்று முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரர்களின் முழு அஞ்சல் முகவரியும் இருக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.
6. ஒப்பந்தக்காரர்கள் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்யவேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணம் இன்றி நிராகரிக்கமுடியும்.
7. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும். ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ.50.00 மதிப்புள்ள ஸ்டாம்பு பேப்பரில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தை ரூ.5.00 பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளவேண்டும்.
8. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்புகளுக்கும் ஒப்பந்தக்காரர்களே பொறுப்பாவார்கள்.
9. ஒப்பந்தப்புள்ளி கொடுத்து பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்கள் டேவணித்தொகையும் மேலே கண்டுள்ள 8 பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரர்களின் வைப்புத் தொகைகளையும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.
10. குறிப்பிட்ட தேதியில் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் இவ்வேலைக்காக செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாக கருதப்பட்டு பேரூராட்சி நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.
11. சாலை வேலைகளை பொறுத்தவரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்படமாட்டாது. வேலையை நல்ல முறையில் செய்து முழு அளவில் முடித்த பின்னர் தான் முழுத்தொகையும் பட்டுவாடா செய்யப்படும்.

(த.பி.பா)

12. சிமெண்ட் மற்றும் தார் பேரூராட்சியில் இருப்பு இருப்பின் சப்ளை செய்யப்படும். சிமெண்ட் மற்றும் தார் பேரூராட்சியில் இருப்பு இல்லாத பட்சத்தில் ஒப்பந்தக்காரர்களே நல்ல தரமான சிமெண்ட் மற்றும் தார் வாங்கி கொள்ளவேண்டும். இதன் பொருட்டு வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும்.
13. மேற்படி பணிக்கு தேவைப்படும் சிமெண்ட், ஜல்லி, மணல், செங்கல் மற்றும் கம்பி ஆகியவற்றினை அரசு ஆய்வகத்தில் சோதனை செய்து தரத்தினை உறுதி செய்யப்பட்ட பின்பு தான் பயன்படுத்தப்பட வேண்டும்.
14. சிமெண்ட் கான்கிரிட் பணி மேற்கொள்ளும் போது உரிய கான்கிரீட் கியூப் தயார் செய்து அரசு ஆய்வகத்தில் பரிசோதனை செய்து தரத்தினை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
15. கட்டுமானம் வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்று பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்தக்காரர் சேகரித்திடல் வேண்டும்.
16. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் காசோலையாக திருப்பி வழங்கப்படும்.
17. வேலை முடித்தபின்னர் பட்டியலில் கீழ்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | | |
|---|---|---|---|
| அ) | கூடுதல் வைப்புத் தொகை | : | 3 % |
| ஆ) | வருமான வரி | : | 2% |
| இ) | வருமானவரி மேல்வரி | : | 10% |
| ஈ) | கல்வி வரி | : | 5% |
| உ) | விற்பனை வரி | : | 2% |
| ஊ) | விற்பனை வரி மேல் வரி | : | 5% |
| எ) | தொழிலாளர் நலச்சந்தா தொகை | : | 0.3% |
| ஏ) | நிறுத்தி வைக்கப்படும் தொகை | : | ஏதாவது இருந்தால் அத்தொகை மட்டும். |

18. தொடர்புடைய வேலைக்கென பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு அறிக்கையில் தடை ஏதும் இல்லை என முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைக்கான ஒப்பந்தக்காரர்களால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணபத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.
19. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்பொழுது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலை செய்யவேண்டும்.
20. வேலைகள் சம்பந்தமாக இதர விபரங்கள் வேண்டுவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் செயல் அலுவலரிடம் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
21. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும்படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.
22. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த அடங்கிய விளம்பர பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

(த.பி.பா)

23.ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை ரூ.5.00 இலட்சத்திற்கும்மேற்பட்டபணிகளுக்கான http://townpanchayats.tn.gov.in என்ற பேரூராட்சிகளின் இணைய தளத்திலும், ரூ.10.00 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளுக்காக http://www.tn.gov.in என்ற தமிழக அரசு இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

24.இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகளை செய்து முடிக்க வேண்டும்.

25. E-tender மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து, ஒப்பந்ததாரர் மூலம் தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

26.மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவீதத் தொகையில் வங்கி உத்திரவாதச் சான்று இணைக்க வேண்டும் அல்லது கூடுதல் காப்புத் தொகையினை ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்திய பிறகு வேலையை ஆரம்பிக்கவேண்டும்.

27.ஒப்பந்தக்காரர் இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க வேண்டும். டேவணித்தொகை, முன் அனுபவச்சான்றிதழ், ஒப்பந்ததாரர் வகுப்பு தகுதிச் சான்றிதழ் (தகுதி குறைந்த ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க தகுதியற்றவர் ஆவார்) நிதிநிலை அறிக்கை விற்பனை வரிச்சான்றிதழ் போன்ற விபரங்களை ஒரு உறையில் வைத்து உறையின் வெளிப்புறத்தில் “Technical Bid” என்று குறிப்பிட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்த நமூனா வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் “Price Bid” என்று குறிப்பிடவேண்டும். இவ்விரு உறைகளையும் ஒரு பெரிய உறையில் வைத்து சமர்ப்பிக்க வேண்டும். இதில் முதலில் “Technical Bid” என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விபரங்களுடன் தகுதியாக இருந்தால் மட்டுமே “Price Bid” என்று குறிப்பிட்டிருக்கும் இரண்டாவது உறை பிரிக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியானதாக இல்லையெனில் “Price Bid” உறை திறக்கப்படாமலேயே சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திருப்பி அனுப்பப்படும்.

28. ஒப்பந்ததாரர் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏதாவது இரண்டு ஆண்டுகளில் மேற்கண்ட அட்டவணையில் கலம் எண் 3ல் கண்டுள்ள மதிப்பீட்டுத் தொகை போல இரண்டரை மடங்கு குறையாமலும் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளில் மேற்காணும் அட்டவணையில் கலம் எண். 2ல் கண்டுள்ள பணி போன்று ஒன்றினை செய்து முடித்திருக்கவேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படவேண்டும். இதுபோன்ற முன் அனுபவச்சான்றிதழ் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். இதர விபரங்களை அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்**
தேன்கனிக்கோட்டை பேரூராட்சி
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**பெறுபவர்.**

பேரூராட்சி பதிவுபெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள்
தேன்கனிக்கோட்டை பேரூராட்சி.

**நகல்.**

1. இயக்குநர் அவர்கள், பேரூராட்சிகள், சென்னை – 108 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், கிருஷ்ணகிரி மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை –5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், தருமபுரிமண்டலம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
5. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் உதவி இயக்குனர் அலுவலகம், தருமபுரி மண்டலம், அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
6. உதவி பொறியாளர், பேரூராட்சிகள், காவேரிப்பட்டிணம் தொகுதி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.
7. அனைத்து பேரூராட்சிகள் கிருஷ்ணகிரி மாவட்டம் அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய கேட்டு அனுப்பப்படுகிறது.
8. அனைத்து ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் , விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய கேட்டு அனுப்பப்படுகிறது.
9. அனைத்து நெடுஞ்சாலை துறை அலுவலகங்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய கேட்டு அனுப்பப்படுகிறது.
10. அலுவலக விளம்பர பலகைக்கு.
11. தலைவர் அவர்கள் மேஜைக்கு.
12. நகல் 117/2010 கோப்பிற்கு.